# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள்.03.07.2026**

**முன்னிலை**
**திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 16890/H/2024**

திரு.ம.வடிவேல் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சி மாவட்டம்-620001. — பொது அதிகார அமைப்பு

**கோரிய தகவல்:** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 04.10.2024 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலுவலர் ஆணை எண்.ந.க.ஆ6/38458/2022, நாள்.26.06.2023 தேதியிடப்பட்ட ஆணை தனக்கு அனுப்பப்பட்டதா உள்ளிட்ட 7 இனங்களுக்கான தகவல் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது (03.07.2026) இன்று காணொலி காட்சி மூலம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| **மேல்முறையீட்டாளர்** | **திரு.ம.வடிவேல்** அவர்கள் இன்றைய விசாரணைக்கு காணொலி காட்சி வாயிலாக ஆஜரானார். |
| **பொதுத் தகவல் அலுவலர்** | பொதுத் தகவல் அலுவலர் **திரு.கு.இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர், திருச்சிராப்பள்ளி** அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

**<u>ஆணை</u>**

இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் 11.03.2025, 22.05.2025, 14.11.2025 மற்றும் 01.07.2025 ஆகிய தேதிகளில் மனுதாரருக்கு தகவல் வழங்கியதாக ஆணையத்திடம் தெரிவித்தார். இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

**மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல் போதுமானதாகக் கருதப்படுகிறது. இருப்பினும் பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு காலதாமதமாக தகவல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இதுபோன்ற தவறுகள் இனிவரும்காலங்களில் நிகழாவண்ணம் செயல்படும்படியும், முறையாக 30 நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவல் வழங்கும்படியும் பொது தகவல் அலுவலருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு, இந்த மனு இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.**

**ஒம்/-(அ. விஜயராம்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16890/H/2024</u>**

**<u>பெறுநர்</u>**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சி மாவட்டம்-620001.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.ம.வடிவேல்,
எண்.12, செக்கடி தெரு,
தாராநல்லூர்,
திருச்சிராப்பள்ளி-620008.
தொலைபேசி - 9345157916.

Copy to: file.
GP/PC

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005